Sri Lanka Journal of Social Development, Volume 01: Issue 10: December 2023

# 6 முகநூலில் பெண்களுக்கு எதிரான இணையவழி வன்முறைகள்: யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.

*கிசோபனா சுந்தரலிங்கம், கீர்த்திகா சுந்தரலிங்கம்*

**ஆய்வுச்சுருக்கம்:**

சமகால சமூகத்தில், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான இணைய வன்முறை சமூக ஊடகங்களில் ஒரு பொதுவான நிகழ்வாகிவிட்டது. தற்போது இலங்கையில் அதிகம் பயன்படுத்தப்படும் சமூக ஊடகத்தளமாக முகநூலினைக் குறிப்பிடலாம். இந்த ஆய்வின் நோக்கம் முகநூலினூடான இணைய வன்முறையின் பாலினத் தன்மையை ஆராய்வதாகும். இவ் ஆய்விற்காக பண்பு மற்றும் அளவு சார்ந்த நுட்பமுறைகளை கொண்ட இணைந்தநுட்பமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்காக முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டு பகுப்பாராயப்பட்டுள்ளன. முதல்நிலைத்தரவு சேகரிப்புக் கருவிகளாக நேர்காணல், Facebook தள அவதானம் மற்றும் வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் இருபது முகநூல் துஸ்பிரயோகத்திற்குட்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் இவ் ஆய்வில் உள்வாங்கப்பட்டுள்ளனர். இரண்டாம்நிலைத் தரவுசேகரிப்புக் கருவிகளாக இணைய செய்திகள், ஆய்வுக் கட்டுரைகள், ஆவணப்படங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவில் அதிகளவில் பெண்கள் Facebook இல் பல்வேறுபட்ட வழிமுறைகளினூடாக குறிப்பாக தீங்கான உள்ளடக்கம், வெறுப்புப்பேச்சுக்கள்-பெண்களுக்கெதிரான பாலியல் வெறுப்புப் பேச்சுக்கள், பாலினக்காட்சி பகிர்வு, இழிவுபடுத்தும் சொற்பிரயோகம், கேலி எனும் வடிவில் துஸ்பிரயோகத்திற்கு உட்பட்டிருப்பினும், அதிகளவில் இப்பெண்கள் பாலியல் ரீதியான துஸ்பிரயோத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்பெண்களை துஸ்பிரயோகத்திற்குட்படுத்தியோர் மீம்கள், படங்கள், வீடியோக்கள் மற்றும் அவதூறான சொற்பிரயோக இடுகைகளின் மூலம் இப்பெண்களை துஸ்பிரயோகப்படுத்தியதாக தரவின் முடிவுகள் காட்டுகின்றன. எனவே இணைய வன்முறைக்கு எதிரான சட்டதிட்டங்கள் , அவற்றிற்கு எதிராக செயற்படக்கூடிய நிறுவனங்களது செயற்பாடுகள் தொடர்பில் பல்கலைக்கழக மாணவர்களை அறிந்திருக்கச்செய்வது அவசியமாகும். இதன்மூலம் பெண்கள் இவ் இணையவன்முறைச் சம்பவங்களிலிருந்து விடுபடவும், அதற்கு எதிராகச் செயற்படவும் முடியும்.

**குறிப்புச் சொற்கள்:** *Facebook, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான இணையவழி வன்முறை, நிகழ்நிலை (Online) துஸ்பிரயோகம், துன்புறுத்தல்கள்.*

## அறிமுகம்

இன்றைய காலத்தில் இணையற்ற தளமாக இணையத்தில் இடம்பிடித்துள்ள முகநூலானது நாளாந்த செய்திகள் முதற்கொண்டு பொழுதுபோக்கு அம்சங்கள் வரை அனைத்தையும் உள்ளடக்கியதாக உடனுக்குடன் தகவல்களை அறிந்துகொள்வதற்கான தளமாகக் காணப்படுவதுடன் இளைஞர்களை ஆட்கொண்டுள்ளது. அந்தவகையில் இணையம் முழுவதிலும் முகப்புத்தகம் தான் இரண்டாவது மிகப் பிரபலமான இணையத்தளமாகும். இவ் முகப்புத்தகத்தினை உபயோகிப்பவர்கள் தங்களுடைய புகைப்படம், சொந்த விருப்பங்கள், தொடர்பு கொள்ளும் விபரம் போன்ற தகவல்களைக் கோப்புக்களாக அத்தளத்தில் பதிவு செய்யக்கூடிய வகையில் தளம் அமைத்துக்கொடுத்துள்ளதுடன், ஒருவர் தன் நண்பர்களுடன் கலந்துகொண்ட தகவல்களை யாரெல்லாம் அறிந்துகொண்டார்கள், யாரெல்லாம் தன்னைப் பற்றிய தகவல்களைத் தேடினார்கள் என்று அறிந்து இவற்றைக் கட்டுப்படுத்தக் கூடிய முறையும் காணப்படுகிறது[3]. சமூகத்தின் ஒவ்வொரு பிரஜையும் தமக்கான அடையாளத்தை இவ் முகப்புத்தகங்கள் வழியாக வெளிகாட்டுகின்றனர். தமது தனிப்பட்ட தகவல்கள் புகைப்படங்களை வெளியிடுகின்ற போது அதன் மூலமாக ஏற்படக் கூடிய விளைவுகள் தொடர்பில் சிந்திப்பது இல்லை. உணவு உண்பது முதல் படுக்கைக்குச் செல்லும் வரை தமது அன்றாட செயற்பாடுகளை (daily Routine) பதிவிடுகின்றனர். இவ்வாறு பதிவிடுகின்றபோது இவர்களுக்கு எதிரானவர்கள் அல்லது ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்த விரும்பும் ஒருவர் குறிப்பிட்ட நபரது தகவல், புகைப்படங்களை தவறாக பிரயோகிக்கும் தன்மை ஏற்படுகின்றது. இணைய துஸ்பிரயோகம் என்பது ஒரு நபரை மிரட்டுவதற்கு மின்னணு தகவல் தொடர்புகளின் பயன்பாடு, பொதுவாக மிரட்டும் அல்லது அச்சுறுத்தும் இயல்புடைய செய்திகளை அனுப்புவதாகும் இணையவழி வன்முறைகள் என்பது தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஒருவரை பாதிப்படையச் செய்வதற்காக கொடுமைப்படுத்தல், பயமுறுத்துதல், மன உளைச்சலுக்குள்ளாக்குதல், பாகுபாடு காட்டுதல், வற்புறுத்தல் அல்லது உடல், உள, உணர்வு ரீதியாக ஏதாவது வகையான துஸ்பிரயோகத்தினை ஏற்படுத்துவதைக் குறிக்கும். இவை எமக்குத் தெரிந்த தெரியாத நபர்கள் மூலமாக போலியான கணக்குகள் உருவாக்கப்படுவதன் மூலம் இடம்பெறுகின்றது. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை முகநூல் வழியான இணையத்தாக்குதல்களுக்கு உள்ளாகிக்கொண்டு தான் வருகின்றனர். ஆனால் இவை வெளிப்படையாக வெளிப்படுத்தப்படாமல் இரகசியமாகப் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அரசியலில் ஈடுபடுகின்ற பெண்களை பாதிக்கச் செய்யும் வகையில் (Revenge porn) இடம்பெறுகின்றது. மற்றும் தகவல்களை திருடுதல், புகைப்படங்களைக்கொண்டு அவதூறு செய்தல் , தவறான வார்த்தைப்பிரயோகம் போன்ற பல வடிவங்களில் இடம்பெறுகின்றது.

அந்தவகையில் United Nation Office on Drugs and Crime (2017) இன் தகவலின்படி 2015 இல் பதிவு செய்யப்பட்ட இணைய வன்முறைச் சம்பவங்களின் உலகளாவிய எண்ணிக்கை 59.6 மில்லியன் ஆகும். இதற்கென 2019 இல் மேற்கொள்ளப்பட்ட அனைத்து தரவு மீறல்களுக்கெதிரான வருடாந்த மொத்தச் செலவு $2.1 ரில்லியனாகும். மறுபுறம் இலங்கையைப் பொறுத்தவரையில் மக்கள் சனத்தொகையினைவிட அதிகமாக முகப்புத்தகக் கணக்குகளே காணப்படுகின்றன. இதற்கான காரணம் யாதெனில் ஒரு நபர் இரண்டுக்கு மேற்பட்ட முகப்புத்தகக் கணக்குகளைப் பயன்படுத்துவதேயாகும். அந்தவகையில் இலங்கையில் 2023 ஜனவரி மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி 8.5 மில்லியன் பாவனையாளர்கள் முகநூலினைப் பயன்படுத்துவதாக குறிப்பிடப்படுகின்றது[4]. இலங்கையில் இணையவழி பாதுகாப்பு தொடர்பான தேசிய மத்திய நிலையம் (2021) கூறுகையில; 14%

இளைஞர்கள் இணையவழியாக நிகழும் அடையாள திருட்டுக்கு (Identity Theft) முகம் கொடுத்ததுடன், 11% நபர்களின் கணக்குகள் ஊடுருவல் (Hack) செய்யப்பட்டுள்ளதோடு, 9% நபர்களின் புகைப்படங்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் 71% நபர்கள் தங்களுக்கு நடந்த துஷ்பிரயோகத்திற்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை எனக் கூறப்படுகிறது. அத்துடன் இலங்கையில் மக்களை அதிகம் பாதிப்பிற்கு உள்ளாக்கப்படும் இடமாக முகநூல் வழியான இணைய பகிடிவதை அல்லது துஷ்பிரயோகங்கள் நிகழ்கிறது. மேலும் இங்கையில் 2017 இல் ஒருங்கிணைப்பு மையம் (CERT) 3907 இணைய வன்முறை தொடர்பிலான சம்பவங்களைப் பெற்றது. இது 2010 இனை விட அதிகரித்துக் காணப்பட்டதால் 5 வருட காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும் (2018-2022) வரையிலான இலங்கையின் தகவல் மற்றும் இணையப்பாதுகாப்பு உத்தியை அறிமுகப்படுத்தினர்.

கொவிட் தொற்றிற்குப் பிந்தய சூழலில் ஏற்பட்ட இணையப்பாவனையின் அதிகரிப்பானது யாழ்ப்பாண உயர்தர கல்வி மாணவர்களிடையே குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்களிடையே அதிகரித்துச் சென்றுள்ளது. அந்தவகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இணையவழிவன்முறை குறிப்பாக பெண்களுக்கெதிரான முகநூல் வழியான இணையவழி வன்முறை இங்கு ஆராயப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்காக அளவு மற்றும் பண்புசார் முறைகளை ஒருங்கே கொண்ட இணைந்தமுறை (Mixed method) பயன்படுத்தப்பட்டுமுள்ளது. ஆய்வுக்குரிய முதல்நிலத் தரவுசேகரிப்புக் கருவிகளாக (i)அவதானிப்பு - முகப்புத்தகம் வழியாக இடம்பெற்ற மற்றும் இடம்பெறுகின்ற இணையவழி அச்சுறுத்தல்கள் தொடர்பாக அவதானித்தல். இது கட்டமைக்கப்படாத அவதானிப்பு மற்றும் பங்காற்றுகையற்ற அவதானிப்பு முறையாகவும் அமையப்பெறலாம். (ii) நேர்காணல் (iii) வினாக்கொத்து என்பன பயன்படுத்தப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்புக் கருவிகளாக அறிக்கைகள், ஆய்வுகள், கட்டுரைகள் போன்றவற்றை பயன்படுத்தியுள்ளேன். ஆய்விற்கான மாதிரி வடிவமைப்பு நோக்கம் கருதிய மற்றும் பனிப்பந்து முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்து முகநூல் வழியான துஸ்பிரயோகத்திற்குட்பட்ட 20 மாணவர்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

**இலங்கையில் இணையவழிக் குற்றங்களைத் தடுப்பதற்காக காணப்படும் சட்டங்கள்.**

1. Information and Communication Technology Act (No.27 of 2003)
2. Evidence (Special provisions) (Act No.14 of 1995)
3. Intellectual property Act (No.36 of 2003 Sections relate to copyright)
4. Electronic Transactions Act (No.19 of 2006)
5. Computer Crimes Act (No.24 of 2007)
6. Telecommunication Act( No.25 of 1991)
7. Section 286B of the penal code (Amendment Act No.16of 2006)
8. Code of criminal Procedure code Act (No.19/1979)
9. Payment and settlement Systems Act (No.28 of 2005)
10. 10.Payment Devices Frauds Act (No.30 of 2006)


**இலங்கையில் இணையவழி பாதுகாப்பு தொடர்பாக செயற்படும் அமைப்புகள்**

- Sri Lanka CERT - onlinesafety.lk, cert.gov.lk
- Sri Lanka CERT (Computer Emergency Readiness Team) : CID-Criminal Investigation Department, NCPA- National Child Protection Authority, Ministry of Women &children Affairs, Women in Need, Sri Lanka Sumithrayo, Fin CSIRT and Need/Stolen phone.

**இணையக் குற்றங்கள் தொடர்பிலான விழிப்புணர்வினை பொது மக்கள் ஏற்படுத்தும் வகையில் காணப்படும் முகநூல்ப் பக்கங்கள்**

- Bakamoono.lk
- Hashtag Generation
- Women in Need
- Grass rooted trust
- Hithawathi

**ஆய்வுக்கற்கையின் எண்ணக்கருசார் விளக்கம்**



## சமூக ஊடகங்களும் பெண்களுக்கெதிரான இணையவழி வன்முறைகளும்

சமகால சமூகத்தில் பெண்களுக்கெதிரான இணையவழி வன்முறைகள் சமூகத்தில் அதிகரித்துச் செல்லும்போக்குக் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தை அடிப்படையாகக் கொண்ட அனுதர்ஷி லிங்கநாதனின் (2019) ஆய்வானது 20 தொடக்கம் 45 வயதிற்குட்பட்ட அரசியலில் உள்ள 10 பெண்கள் , பத்து பெண் ஊடகவியலாளர்கள், வேலைக்குச் செல்லும் பத்துப் பெண்கள், வேலைக்குச் செல்லாத பத்து பெண்கள், மற்றும் பல்கலைக்கழக மாணவிகள் பத்துப் பேர் என ஐம்பது பெண்கள் தெரிவுசெய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவர் குறிப்பிடுகையில் ஆய்வுக்குட்படுத்திய 50 பேரில் நாற்பத்தியொரு பேர் (82%) பெண்கள் சமூக ஊடகங்கள் வழியான இணைய வன்முறையை எதிர்கொண்டவர்களாக கண்டறியப்பட்டுள்ளது. இலங்கையில் இணையவழி வன்முறைகள் பற்றி அறிந்திருக்கும் பெண்கள் கூட அவர்கள் எதிர்கொண்ட வன்முறைகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையை நடாது உள்ளமையை சுட்டிக்காட்டியிருந்தார்.

## பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் முகநூலின் அதிகரித்த பாவனையும், இணைய வன்முறையும்

பல்கலைக்கழக மாணவர்கள் (20-25 வயதிற்குட்பட்டோர்) சமூக ஊடகங்களை அதிகமாகப் பயன்படுத்துவதனால் பெண்களுக்கெதிரான இணைய வன்முறை முக்கிய பிரச்சனையாக காணப்படுகிறது என்பதனை இவ் ஆய்வு கண்டறிந்துள்ளது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பல்கலைக்கழக மாணவிகள் குறிப்பிடுகையில் கொவிட் லொக்டவுன் காலத்தில் அதிகளவில் வீட்டினுள் முடங்கியிருந்தமையால் தமது பொழுதுபோக்கினை போக்குவதற்காக முகநூலில் அதிகளவு நேரம் செலவழித்ததாக 65%ஆனோர் குறிப்பிடுகையில், 35%ஆனோர் நிகழ்நிலை (Online) மூலமான வகுப்புக்கள் தொலைபேசி பாவனையை அதிகரித்ததாகவும், அதன் விளைவு முகநூல் பாவனைக்கு தம்மை அடிமையாக்கியதாகவும் தெரிவித்தனர். மறுபுறம் Sophia Alim (2016) இங்கிலாந்தில் 2012-2014 ஆண்டு வரையிலான காலப்பகுதில் இடம்பெற்ற இணையவன்முறையின் பரவல், இணைய வன்முறையின் அம்சங்கள் , வடிவங்கள், இணைய வன்முறை மேற்கொள்வதற்கான நோக்கம், பள்ளிச் சூழல், உளவியல் விளைவுகள் , இணைய அடிமைத்தனம், இணையவழி கல்வியின் அவசியம் போன்ற விடயங்களை ஆய்விற்குட்படுத்தினார். இதனடிப்படையில் இவர் குறிப்பிடுகையில் 2012 – 2014 க்கு இடையில் இடம்பெற்ற இணைய வன்முறையானது பதின்ம வயது பெண் மாணவர்களை அதிகளவில் பாதித்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் Marija Markovic, Zorica Stanisavljevic Petrovic, Anastasija Mamutovic (2020) போன்றோர் அயர்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வினடிப்படையில் குறிப்பிடுகையில் பாடசாலை பெண்கள் மத்தியில் நவீன ஊடகங்களின் அதிகரித்த பாவனையானது அவர்கள் இணைய வன்முறைக்கு அதிகளவில் முகங்கொடுக்க நேரிடுகிறது. இவ் ஆய்வில் இணைய வன்முறை என்ற வார்த்தையின் அர்த்தம் , அதன் வெளிப்பாட்டு வடிவங்கள் , கொடுமைப்படுத்துபவர்கள் , இணைய வன்முறையை எதிர்கொள்பவர்கள் (பாதிக்கப்பட்டவர்கள்) மற்றும் அவர்களது நடத்தையின் விளைவுகள் என்பன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. இவர்கள் குறிப்பிடுகையில் 3004 மாணவர்களில் (12-16 வயதிற்குட்பட்ட) 33.6% ஆண்களும் 66.4% பெண்களும் இணையவழி வன்முறைக்குட்பட்டதாக கண்டறிந்தனர். பெண்கள் இணைய வன்முறையினால் பாதிக்கப்படுகின்ற போது அவர்களுக்கு பெற்றோர் மற்றும் குடும்ப ஆதரவு கிடைக்கப்பெறுவதாகவும் ஆண்களுக்கு அவ்வாறான ஆதரவு கிடைப்பதில்லை என்றும் இவரது ஆய்வு முடிவுகள் முன்வைக்கின்றன. மேலும் குற்றமிழைப்பவர்களில் பாரம்பரிய மற்றும் இணைய வன்முறை ஆகிய இரண்டிலும் 20% ஆன ஆண் பாடசாலை மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்பதனையும் இவர்களது ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

எனவே, மேற்கத்தேய நாடுகளில் பெண் பாடசாலை மாணவர்கள் இணையவன்முறைக்கு அதிகளவில் உள்ளாகும் அதேவேளையில் இலங்கையில் பல்கலைக்கழக பெண் மாணவர்களை குறிவைக்கும் முகநூல் வழியான இணையவன்முறைச்சம்பவங்கள் அதிகளவில் காணப்படுகின்றமை வெளிப்பட்டுள்ளது.

### முகநூல் வழியான பாலியல் ரீதியான துன்புறுத்தல்: Revenge Porn

ஒரு நபரினை இழிவுபடுத்தும் நோக்கில் அல்லது அவ்நபரின் நற்பெயரிற்குத் தீங்குவிளைவிக்கும் நோக்கில் வெளிப்படையாக பாலியல்படங்கள் அல்லது வீடியோக்களை விநியோகிப்பதனை Revenge Porn குறிக்கின்றது. ஒருவருடைய அனுமதியுடன் பெற்றுக்கொண்ட புகைப்படத்தைக் கொண்டு அல்லது சம்மதம் இல்லாமல் நெருங்கிய உறவுகள் மூலம் பெற்றுக்கொண்ட புகைப்படத்தைக் கொண்டு குறித்த நபரினை மிரட்டுவதனைக் குறிக்கின்றது. இவ்வன்முறையை பயன்படுத்தும் முறைகளாவன: (i) குறித்த புகைப்பட அல்லது வீடியோ உரிமையாளரை பாலியல் செய்கைளைச் செய்ய அச்சுறுத்துத்தல் (ii) உறவைத்தொடர அல்லது உறவை முறித்துக்கொள்ள அச்சுறுத்துதல்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பெண் மாணவர்கள் அதிகளவில் பாலியல் ரீதியிலான இணையவழி வன்முறைக்குட்பட்டதாக தெரிவித்தனர். குறிப்பாக இப்பெண்கள் அவர்களிற்கு மிகவும் நெருக்கமான நபரினால் (காதலன், நண்பர்) இவ்வாறான வன்முறைக்குட்பட்டதாக இவ் ஆய்வின் தரவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இணையவழி வன்முறைக்குட்பட்ட பெண்களிற்கு பாலியல் வன்முறைச் சம்பவங்களை ஏற்படுத்தியவர்களாக ஆண்கள் மாத்திரமன்றி பெண்களும் (அவர்களது சக தோழியர்) காணப்படுகின்றனர். இதனை வெளிப்படுத்தும் வகையிலான இரு நேர்காணல் தரவுகள் இங்கே இணைக்கப்பட்டுள்ளது.

கமலி (புனைபெயர்) என்பவள் பல்கலைக்கழக காலத்தில் சக ஆண் மாணவனைக் காதலித்து வந்தாள். அவ்வாறு காதலித்த காலத்தில் இருவரும் மிகவும் நெருக்கமான புகைப்படங்களை எடுப்பது வழக்கமாக இருந்தது. இவ்வாறு காலங்கள் கடந்து செல்லும்போது இருவருக்கும் இடையே சண்டைகளும், சந்தேககங்களும் அதிகரித்துச் சென்றது. அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் குறித்த பெண்ணின் வீட்டில் வெளியூர் திருமணத்திற்கான ஒழுங்குகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. குடும்பச்சூழ்நிலையையும், குடும்பத்தாரது வற்புறுத்தலையும் ஏற்றுக்கொண்ட பெண் அவ்வெளியூர் திருமணத்திற்கு சம்மதத்தை தெரிவித்திருந்தாள். இதனை அறிந்த அவளது காதலன் காதலித்த காலத்தில் இருவரும் நெருக்கமாக எடுத்துக்கொண்ட புகைப்படங்களை முகநூலில் பகிர்ந்து கொண்டதுடன் , அவள் மேல் பழிதீர்த்துக்கொண்டான். இது அப்பெண்ணின் உறவினர்களுக்குத் தெரியவந்தமையால் அவளது திருமணம் தடைப்பட்டது. இதனால் மன அழுத்தத்திற்குள்ளான பெண் தற்கொலை முயற்சி செய்து குடும்பத்தாரினால் காப்பாற்றப்பட்டாள்.[1]

வனயா (புனைபெயர்) என்பவர் விடுதியில் தங்கியிருக்கும் பல்கலைக்கழக மாணவியாவார். இவளிற்கு சிந்து (புனைபெயர்) எனும் நெருங்கிய நண்பியொருவர் இருந்து வந்துள்ளாள். இருவரது நட்புப் பயணத்தில் இருவருக்குமிடையே சண்டை ஏற்பட்டுள்ளது. இதனால் இருவரும் பேசிக்கொள்வதனை நிறுத்திக் கொண்டுள்ளனர். வனயாவை பழிவாங்க எண்ணிய சிந்து, வனயாவின் அடையாளத்தில் முகநூல் கணக்கு ஒன்றை ஆரம்பித்து பல ஆண்களுடன் முகநூல்வழியாக கதைத்து வந்துள்ளாள். அத்துடன் வனயாவின் பெயரில் முகம்தெரியாத வகையில் அவ் ஆண்களுடன் வீடியோ அழைப்புக்களையும் மேற்கொண்டுள்ளாள். இவள் விடுதியில் வனயாவின் தனிப்புகைப்படங்களையும் , குளிக்கும் காட்சிகளையும் வீடியோக்கள் எடுத்து முகநூலிலும், குழுக்களிலும் பகிர்ந்து பழிவாங்கியுள்ளாள். வனயாவின்

உறவினர் ஒருவர் இதுதொடர்பில் விசாரிக்கையில் வனயா விழிப்புணர்வடைந்ததுடன், பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாட்டினை மேற்கொண்டாள். வனயாவின் பெயரில் உருவாக்கிய போலி முகநூல் கணக்கு தடைசெய்யப்பட்டதுடன் , பொலிசார் சிந்துவிற்கு அவளது செயற்பாடு தொடர்பில் எச்சரிக்கை விடுததுள்ளனர்.[ii]

இவ் நேர்காணல் அடிப்படையில் நோக்குகையில் முகநூல் ரீதியிலான பாலியல் வன்முறைக்கு ஆண்களாலும் , பெண்களாலும் பெண்கள் அதிகளவில் உள்ளாவதுடன் , புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களினை இடுகையிடுவதனடிப்படையில் இவ்வன்முறைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெளிவாகின்றது. எனினும் ஆய்வுக்குட்படுத்தியோரில் 15% ஆன மாணவிகள் மாத்திரமே குறித்த இணைய வன்முறைச்செயற்பாட்டிற்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். ஏனையோர் அதிகளவில் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்தமையை தரவுகள் வெளிப்படுத்திநிற்கின்றன. இதேபோல் சமூக வலைத்தயங்களில் பால்நிலை வன்முறைச்செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்த Merinnage Nelani De Costa (2021) என்பவர் பல்கலைக்கழக பெண்கள் அதிகளவில் முகநூல்வழியான பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாவதாக கண்டறிந்துள்ளார். மேலும் இவர், இப்பெண்களது அந்தரங்க புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை முகநூலில் இடுகையிடுதல், குறித்த பெண் தொடர்பில் அவதூறான பாலியல் வார்த்தைப் பிரயோகத்தின் உள்ளடக்கம் எனும் வழிமுறைகளைக் கையாண்டு இப் பெண்கள் முகநூல்வழியான பாலியல்வன்முறைக்கு உள்ளாகியிருந்ததாக கண்டறிந்துள்ளார். அதேபோல் தென்னாபிரிக்காவில் Omeshree Lakhan என்பவரால் (2021) மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது பதின்மவயதுப் பெண்களின் இணையவழி மிரட்டல் மற்றும் பாலில் தொடர்பிலான நிகழ்நிலை துன்புறுத்தல்களை எதிர்கொள்வதனை Gender relational theory, Femininities, theory of performativity, and feminist new materialism எனும் கோட்பாட்டுப் பிரயோகத்தினூடாக ஆராய்ந்துள்ளார். இவரது முடிவுகள் உயர்கல்வி கற்கும் பதின்ம வயதுப்பெண்கள் அதிகளவில் நிகழ்நிலையில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றமையை வெளிப்படுத்துகின்றது. மேலும் இவர் குறிப்பிடுகையில் பதின்ம வயதினர் திங்கிழைக்கக் கூடிய நிகழ்நிலை நடைமுறைகளில் தீவிரமாக ஈடுபடுவதன் மூலம் தாமும் இவ் இணையவழி துன்புறுத்தலை தூண்டுவதற்கான காரணியாக இருப்பதனை கண்டறிந்துள்ளார். இவ் முடிவுகளினடிப்படையில் பெண்களுக்கெதிரான முகநூல்வழியான வன்முறைகளில் அதிகளவில் பாலியல் ரீதியிலான வன்முறைகளிற்கு உள்ளாகின்றனர் எனும் அனுமானத்தினை எட்டமுடிகின்றது.

**பெண்களுக்கெதிரான இணையவழி வன்முறையும் உளவியல் ரீதியான பாதிப்புக்களும்**

முகநூல் வழியான இணைய வன்முறைக்குட்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக பெண் மாணவிகளில் 98% மானோர் தாம் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டதாகத் தெரிவித்தனர். மேலும் இவ் மாணவிகள் குறிப்பிடுகையில் முகநூல் வழியான வன்முறையைத் தொடர்ந்து தாம் சமூகத்தில் கேலிக்குள்ளாகியதாகவும், நண்பர்களால் புறக்கணிக்கப்பட்டதாகவும், சமூகத்தின் பழிச்சொல்லிற்குள்ளாகியதாகவும் வெளிப்படுத்தினர். இதனால் அதிகளவு மன அழுத்தத்திற்குள்ளான இவர்கள் அதிலிருந்து விடுபட அழுகை, தற்கொலை முயற்சி, கற்றல் செயற்பாடு இடைநிறுத்தம், உளவள ஆலோசனை போன்ற மாற்றுவழிகளைக் கையாண்டுள்ளனர்.

Hannah Beghin (2020) என்பவர் குறிப்பிடுகையில் இணைய வன்முறை என்பது மாணவர்களை உள ரீதியில் பாதிக்கும் ஒரு பாரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. மேலும் இவர் இணைய வன்முறையினால் உள ரீதியிலான பாதிக்கப்படுவதனால் அவர்கள் கற்றல் செயற்பாடுகளிலும் ஈடுபடமுடியாத நிலை காணப்படுகிறது என்பதனைக் கண்டறிந்துள்ளார். மறுபுறம் Anutharsi, Poongulaly (2020) ஆகியோர் யாழ்ப்பாணப்பிராந்தியத்தில் சமூக ஊடகங்கள் LGBTIQA+ சமூகத்திற்கெதிரான

இணையவழி வன்முறைத் தாக்கங்களை அதிகளவில் ஏற்படுத்துவதாகவும், Hate speech மூலமான வன்முறைப்பிரயோகம் இச்சமூகத்தவர்களை அதிகளவில் உளரீதியிலான துன்புறுத்தல்களுக்கு உட்படுத்துவதாகவும் கண்டறிந்துள்ளனர்.

**இணையவழிக்கல்வியின் அவசியமும் பெண்களை வலுப்படுத்தலும்**

பெண்களுக்கெதிரான வன்முறை என்பது பாரம்பரியமானது. இது உடலியல் ரீதியிலான வன்முறை வடிவத்திலிருந்து மருவி தற்பொழுது நிகழ்நிலை (online) மூலமான வன்முறைக்கு பெண்கள் உட்பட்டுவருகின்றனர். இங்கு வரலாற்று ரீதியாக வன்முறை என்பது பெண்களுடன் தொடர்புபட்ட சொல்லாக பார்க்கப்படுகின்றமை தெளிவாகின்றது. ஏனெனில் சமூகத்தில் பெண்களை நலிவடைந்த குழுக்களாகவே தந்தைவழிச் சமூகம் கட்டமைத்துள்ளது. இதன் விளைவாகவே உலகளாவிய ரீதியில் அதிகரித்துச்செல்லும் பெண்களுக்கெதிரான இணையவழி வன்முறைகள் அதிகரித்துச்செல்கின்றது. எனவே இதற்கு எதிராகச் செயற்படுவது தொடர்பில் பெண்களை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகும். அந்தவகையில் பாடசாலை மற்றும் பல்கலைக் கழகங்களில் ஆசிரியர்கள் இணைய வன்முறை தொடர்பிலான பயிற்சிகளைப்பெற்று மாணவர்களுக்கு கல்வி புகுட்டவேண்டிய தேவையுள்ளது. மேலும் இணைய வன்முறையை எதிர்கொள்வதற்கு விழிப்புணர்வு, இணையவழிப் பாதுகாப்பு , அது தொடர்பிலான கல்வி, இணைய வன்முறையை கண்டறிவதற்கான மென்பொருள்களை உருவாக்குதல் போன்றனவும் பிரதானமானவை. அத்துடன் இணையவழி வன்முறையைக் குறைத்துக்கொள்வதற்கு சமூகக் காரணிகளை கண்டறிந்து அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முதலில் கண்டறிவது அவசியமாகும் (Sophia Alim, 2016). இணைய வன்முறை தொடர்பிலான தெளிவான வழிகாட்டுதல்களை பள்ளிகள் மற்றும் பல்கலைக் கழகங்கள் கொண்டிருக்கவேண்டியது அவசியமாகும். இணைய வன்முறையினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு என்ன செய்ய வேண்டும், எவ்வாறு அவர்களை பாதுகாக்கமுடியும், நிகழ்நிலை (Online) மூலமாக மற்றயவர்களுடன் எப்படி பழகவேண்டும் போன்ற பல்வேறு முறைகளை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிக்கவேண்டியது அவசியமாகும். பாடசாலைகளைப் பொறுத்தவரை ஆசிரியர்கள் இணைய வன்முறை தொடர்பிலான நடவடிக்கைகளை நிர்வகிக்கும் போது மாணவர்களுக்கு தகுந்த நடவடிக்கைகளைக் கற்பிப்பவர்களாக மட்டுமன்றி பாடசாலையில் இடம்பெறுகின்ற தகாத கொடுமைப்படுத்தல் நடவடிக்கைகளை நிவர்த்தி செய்தல், ஆதரவு அளிப்பவர்களாக மாணவர்கள் துன்புறுத்தப்படுகின்ற போது முதலில் அணுகுபவர்களாக ஆசிரியர்களே காணப்படுகின்றனர். இணைய வன்முறைகளை எப்படி எதிர்கொள்ளலாம் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதற்கான வழிகாட்டுதல்களை பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆசிரியர் கற்பித்தல் செயற்பாடுகளினூடாக வழங்க வேண்டும். இணைய வன்முறை தொடர்பிலான தொழில் முறை மேம்பாட்டு அமர்வுகள் பள்ளி ஊழியர்களுக்கு வழங்குவதில் முன்னுரிமை வழங்கவேண்டும். சிறுவயதில் இருந்தே குடும்பத்தில் குழந்தைகளுக்கு சரியான தகவல்தொடர்பு திறன், அக்கறை போன்ற பல விடயங்களை கற்றுக்கொடுப்பதன் மூலம் அவர்கள் எதிர்காலத்தில் இணைய வன்முறையினால் பாதிப்படையாமல் தடுத்துக்கொள்ள முடியும். மேலும் பெண்களுக்கெதிரான இணையவழி வன்முறையை குறைத்துக்கொள்ள வேண்டுமெனில் Parents feedback , Integrating Machine Learning Components , Integrating New Vulnerability factors , Smart Generation of victim Resources , Synergistic work with the psychology Community போன்றவற்றினை உள்ளடக்கம் அவசியமாகும். முகநூல் வழியாக இடம்பெறுகின்ற வன்முறை நிகழ்வுகளை அடையாளம் காண பெற்றோருக்கத் தெரிவிக்கும் வகையில் Bullyblocker எனும் App இனைப் பயன்படுத்துதல். பேஸ்புக்கில் இணையவன்முறை நிகழ்வுகளை அடையாளம் காண இந்த Bullyblocker துணைபுரிகிறது. (Yasin Silva, Christopher Rich, Jaime Chon, Lisa Tsosie, 2016). அதுமாத்திரமன்றி பல்கலைக்கழகங்கள் பெண்களுக்கெதிரான இணையவன்முறையை எதிர்கொண்ட பெண்களுக்கு எவ்வாறு

முறைப்பாடு செய்ய வேண்டும், இவ்வன்முறையிலிருந்து பெண்கள் தம்மைப்பாதுகாத்துக்கொள்வதற்கான சட்ட நடவடிக்கைகள், வன்முறைக்கெதிராக குரல்கொடுக்கக்கூடிய அமைப்புக்களையும் கற்றுக்கொடுப்பதனூடாக பெண்களை வலுப்படுத்தமுடியும்.

## முடிவுரை

இளைஞர்கள் மத்தியிலான முகநூல் பாவனையின் அதிகரிப்பானது பெண்களுக்கெதிரான இணையவழி வன்முறைச்செயற்பாடுகளை தூண்டியுள்ளது. இவ் இணையவழி வன்முறைச் செயற்பாடுகள் உலகளாவிய சமூகப்பொருண்மையாக உருவெடுத்துள்ளது. இந்த ஆய்வானது முகநூலில் பெண்கள் இணைய வன்முறைக்கு உட்படுவதனை யாழ்ப்பாண பல்கலைக்கழகமாணவர்களை அடிப்டையாகக் கொண்டு கவனம் செலுத்தியுள்ளது. பெண்கள் அதிகளவில் முகநூல்வழி இணையவன்முறைக்கு உள்ளாகியிருக்கின்றனர். இவர்கள் பாலியல் ரீதியிலான இணையவழி வன்முறைக்கு அதிகளவில் உட்பட்டுள்ளனர். குறிப்பாக புகைப்படம், வீடியோக்கள் பதிவு, பாலியல் வார்த்தைகளின் உள்ளீடு, வெறுப்புப்பேச்சுக்களின் உள்ளடக்கம் போன்ற வழிமுறைகளைக் கையாண்டு பெண்களை வன்முறைக்குட்படுத்தியுள்ளனர். இது பெண்களிடையே உள ரீதியான பாதிப்புக்களை அதிகளவில் ஏற்படுத்தியுள்ளது. எனவே பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களது உதவியுடன் இணையவழி வன்முறைச் செயற்பாடுகள் தொடர்பில் கற்பித்தல் மற்றும் அதற்கு எதிராக செயற்பட பெண்களை வலுப்படுத்துதல், சட்ட நடவடிக்கைகள் மற்றும் இணையவன்முறைக்கு எதிராகச் செயற்படும் நிறுவனங்கள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மற்றும் இணையவழி வன்முறைக்கு எதிராக பெண்களை முறைப்பாடு செய்யத் தூண்டுதல் போன்ற செயற்பாடுகளின் மூலம் பெண்களை வலுப்படுத்தமுடியும்.



[i] நேர்காணல் 1: ஆணினால் முகநூல் வழியான பாலியல் துன்புறுத்தலுக்குட்பட்ட 24 வயது பல்கலைக்கழக மாணவியிடம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[ii] நேர்காணர் 2: ஒரேவிடுதியில் தங்கியிருந்த பெண்ணினால் பெண்ணிற்த இடம்பெற்ற முகநூல்வழியான பாலியல் துன்புறுத்தல் சம்பவம்.

## References


Alim, Sophia (2016). Cyberbulling in the World of Teenagers and Social Media: A Literature Review. *International Journal of Byber Behaviour, Psychology and Learning.* 6(2), 68-95.

Amali, I. H. and Jyalal, S. (2018). *Classificaion of cyberblling Sinhala Language Comments on Social Media*. University of Kelaniya, Department of Industrial Management.

Anderson, Jennifer (2021). Staff Cyberbulling.

Anue, N. M. (2009). Cyberbulling. MA Thesis, University of Wisconsin-Stout.

Broadband Commission for Sustainable Development (2015). *Cyber Violence against Women and Girls: A world-wide wake-up call*. https://www.broadbandcommission.org/publication/cyber-violence-against-women/

Broadband Commission for Sustainable Development (2015). *Cyber Violence against Women and Girls: A world-wide wake-up call*. https://www.broadbandcommission.org/publication/cyber-violence-against-women/

Chan, H. L., Kok, Y., Ong, J. and Yuvitasari, F. (2013). *Social cues & cyberbulling in facebook; the effects of flaming messages, friend count and anonymity on cyberbulling behaviors.* Nanyang Technological University, Singapore. https://hdl.handle.net/10356/101024/

Choo, Mie Sze (2016). *Cyberbulling on Facebook and Psychological Adjustment in Malaysian Adolescents*. PhD thesis, University of Hawaii at Manoa.

Coletto, Mauro., Aiello, Luca Maria., Lucchese, Claudio., Silvestri, Fabrizio (2016). *On the behavior of Deviant Communities in Online Social Networks*. In 10th International AAAI Conference on Web and Social Media. ICWSM 2016, May 17, Cologne, Germany. https://www.cnr.it/en/focus/074-33/deviant-communities-in-social-media

Englander, Elizabeth. K. (2010). *Girls & Cyber-bulling*. MARC Research Result and Report.

Ging, Debbie., Norman, James O'Higgins (2016). Cyberbulling, Conflict management or just messing? Teenage girls' understandings and experiences of gender, friendship, and conflivt on Facebook in an Irish second level school. *Feminist Media studies,* Vol. 16(5): 805-821. https://doi.org/10.1080/14680777.2015.1137959(Last accessed on 28 August 2023).

Ging, Debbie., Norman, James O'Higgins. (2016). Cyberbulling, Conflict management or just messing? Teenage girls' understandings and experiences of gender, friendship, and conflivt on Facebook in an Irish second level school. *Feminist Media studies*, Vol. 16(5): 805-821. https://doi.org/10.1080/14680777.2015.1137959

Hamm, Michele. P., Newton, Amanda. S., Chisholm, Annabritt., Shulhan, Jocelyn., Milne, Andrea., Sundar, Purnima., Ennis, Heather., Scott, Shannon. D., Hartling, Lisa (2015). Prevalence and Effect of Cyberbulling on Children and Young People: A Scoping Review of Social Media Studies. *Clinical Review & Education.* 770-777. Doi:10.1001/jamapediatrics.2015.0944.

Harasgama, Kushanthi. S., Rathnayaka, Hashini. B., (n.d.) *Combating Cyber- Bulling: An Analysis of Laws in India, Singapore and Sri Lanka.* KDU Liberary, 1(2), 128-146.

Hunt, Frank (2021). *Cyberbulling: Characterisics, Causes and Consequences*. Warbleton council. https://ta.warbletoncouncil.org/ciberbullying-15230

Infotech Tamil (2020). *Ten Common Cyber Crimes*. https://infotechtamil.info/10-common-cyber-crimes/

Know our Righs (2018). *Thusitha Abeysekara Talk: Cyberbullimg in Sri Lanka*. https://youtu.be/bkjj8zfoBg0

Lakhan, Omeshree (2021). *Cyberbulling: Teenage girls' online experiences of, and challenges to sexual harassment*. University of Kwazulu- Natal.

Markovic, Marija., Petricic', Stanisavjevic' Zorica., Mamutociv;, Anastasija (2020). Cyberbulling Among School Children. *Media Studies and Applied Ethics,* 7-19. https://doi.org/10.46630/msae.2.2020.01

Naadhi (2021). *Cyber Bulling in Sri Lanka*. http://nadi.lk?p=46189

Perera, Natasha (2020). *Mitigating the Risk of Cyber crime in Sri Lanka*. Lakshman kadirgamar Institute of International Relation and Strategic Studies. https://www.iki.lk/blog/mitigating-the-risk-of-cyber-crime-in-sri-lanka/

Rajbhandari, Jyostshana and Rana, Karna. (2022). Cyberbullying on Social Media: an Analsis of eachers' Unheard Voices and Coping Strategies in Nepal. *International Journal of Bullying Prevention*, 1-13. https://doi.org/10.1007/s42380-022-00121-1.

Silva, Yasin. N., Rich, Christoper., Chon, Jaime., and Tsosie, Lisa. M. (2016). *BullyBlocker: An App to Identify Cyberbulling in Facebook*. IEEE/ACM International Conference on Advances in Social Networks Analysis and Mining (ASONAM), San Francisco, CA, USA, pp.1401-1405. Doi:10.1109/ASONAM.2016.7752430.

Smith, P.K. (2001). Cyberbulling: Its Nature and Impact in Secondary School pupils. *Journal of Child Psychology and Psychiatry.*

Subaramiaiam, Kasthuri., Kolandaisamy, Raenu., Jalil, Abdurrahman Bin., Kolandaisamy, Indrrah (2022). Cyberbulling Challenges on Society: A Review. *Journal of Positive School Psychology*, 6(2): 2174-2184.